இலஞ்சம் தவிர்!
களம் -22

நெஞ்சம் நிமிர்!
வெற்றி -02

# நேர்மை நெறி

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

## (NERMAI NERI)

(REG.NO.349/2001)

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

பிப்ரவரி 2024
₹ 10

## ஊழலுக்குஎதிராகபோராடுவது மட்டுமேஎங்களின்குறிக்கோள்



## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY
ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்:
155, “நம்பகம்”, கொன்னூர் நெடுஞ்சாலை,
அயனாபுரம், சென்னை-600023
தொலைபேசி எண்: 044 2674 1007
e-mail : acmchennai2001@yahoo.co.in
website : anticorruptionchennai.com

## தலைவர் மடல்

அன்புடையீர் வணக்கம்

அன்பார்ந்த ஊழல் எதிர்ப்பு இயக்க சகோதர சகோதரிகளே! புதிதாக தலைமைப் பொறுப்பு மிகவும் நம்பிக்கையோடு கொடுத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

கடந்த 20-01-2024 அன்று மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட இப் பதவியில் நான் சிறப்பாக பணியாற்ற நினைக்கிறேன். ஆகையால், தங்களுடைய கோரிக்கைகள் மற்றும் புகார்கள் ஏதாவது இருந்தால், என்னுடைய தொடர்பு (**கைபேசி எண் : 9841803685**) எண் மூலம் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 2001ம் ஆண்டு முதல் ஊழலை எதிர்த்து பல்வேறு முயற்சிகளில் இயக்கத்தின் மூலமாக நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட்டு வருகிறோம். இருப்பினும் பல துறைகளில் நம்மால் ஊழலை எதிர்க்க முடியவில்லை. அதற்குக் காரணம் அவர்களுடைய சுயநலம். லஞ்சத்தைப் பணமாகவோ, பொருளாகவோ அல்லது உடல் உழைப்பு மூலமாகவோ கேட்டுப்பெறுகிறார்கள். ஆகவே, லஞ்சம் கொடுப்பவரையும், வாங்குவோரையும் லஞ்சச் செயலுக்கு உறுதுணையாக இருப்பவர்களையும் இனம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் அப்படிப்பட்டவர்கள் மேல் குற்றவியல் நடவடிக்கை எடுக்க லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு , லஞ்சம் கொடுப்பவர்களையும் வாங்குவோர்களையும் கண்டுபிடித்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம்.

**இவண்**

**A நபீஸ் அகமது**
**தலைவர்**
**(கைபேசி எண் : 9841803685)**



## ஊழலில் மிதக்கும் உலக நாடுகள்...
## TI அட்டவணையில் இந்தியா எந்த இடம் தெரியுமா?

வே. கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

**2022ஆம் ஆண்டு உலக நாடுகள் ஊழலில் இந்தியாவின் ஒட்டுமொத்த மதிப்பெண் 40ஆக இருந்தது என்பதும், அப்போது இந்தியா 85வது இடத்தைப் பிடித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.**

உலகின் ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியல் சில நாட்களுக்கு முன்னால் **TI (Transparancy International)** வெளியிடப்பட்டிருக்கிறது. அதில், பெரும்பாலான நாடுகள் ஊழலைக் கையாள்வதில் எந்த முன்னேற்றத்தையும் காட்டவில்லை என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் வெளியிட்ட 2023 ஊழல் புலனாய்வு குறியீட்டின் (CPI)-படி, மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் 50 க்கு கீழே மதிப்பெண் பெற்றுள்ளன.

**CPI ஆனது 180 நாடுகள் மற்றும் பிரதேசங்களை அவற்றின் ஊழல் அளவை பூஜ்ஜியம் (அதிக ஊழல்) முதல் 100 (ஊழலற்ற) வரை மதிப்பிட்டுள்ளது.( விளக்கப் படம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது )**

### உலகின் மிகக் குறைந்த ஊழல் நாடுகள்:

டென்மார்க், 90 மதிப்பெண்களுடன், அதன் சரியாக செயல்படும் நீதி அமைப்புகளால் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக குறியீட்டில் முதலிடத்தில் உள்ளது என்று அறிக்கை கூறுகிறது. பின்னர், பின்லாந்து 87 மதிப்பெண்கள் மற்றும் நியூசிலாந்து 85 மதிப்பெண்கள் என முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

84 மதிப்பெண்களுடன் நார்வே, சிங்கப்பூர் (83), ஸ்வீடன் (82), சுவிட்சர்லாந்து (82), நெதர்லாந்து (79), ஜெர்மனி (78) மற்றும் லக்சம்பர்க் (78) ஆகியவை 2023 ஊழல் புலனாய்வுக் குறியீட்டில் குறைந்த ஊழல் உள்ள நாடுகளாகும்.

### உலகின் மிக ஊழல் நிறைந்த நாடுகள்:

சோமாலியா 11 மதிப்பெண்களுடன், வெனிசுலா (13), சிரியா (13), தெற்கு சூடான் (13) மற்றும் ஏமன் (16) ஆகியவை 2023 ஊழல் புலனாய்வு குறியீட்டில் கடைசி இடங்களைப் பிடித்தன.


### 2023 உலக ஊழல் குறியீட்டில் இந்தியா 93வது இடத்தில்...

இந்தியா, 39 மதிப்பெண்களுடன், 2023ஆம் ஆண்டிற்கான ஊழல் புலனாய்வுக் குறியீட்டில் 93வது இடத்தைப் பிடித்துள்ளது. அதன் ஒட்டுமொத்த மதிப்பெண் பெரிய அளவில் மாறாமல் உள்ளது என்று டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் அறிக்கை கூறியுள்ளது.

2022ஆம் ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த மதிப்பெண் 40ஆக இருந்தது என்பதும், அப்போது இந்தியா 85வது இடத்தைப் பிடித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஊழலில் முன்னேறி 93ம் இடத்தில் இப்போது இருக்கிறது.

29 மதிப்பெண்களுடன் பாகிஸ்தான் மற்றும் 34 மதிப்பெண்களுடன் இலங்கை ஆகியவை அந்தந்த கடன் சுமை மற்றும் அதைத் தொடர்ந்து அரசியல் ஸ்திரமின்மையால் சிக்கியுள்ளன என்று அறிக்கை கூறுகிறது.

2023 ஊழல் புலனாய்வுக் குறியீடு பொதுத் துறை ஊழல் மற்றும் உலக வங்கி, உலகப் பொருளாதார மன்றம், தனியார் இடர் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள், சிந்தனைக் குழுக்கள் மற்றும் பிறர் உட்பட 13 வெளிப்புற சோர்ஸ்களிடம் இருந்து தரவைப் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது. அதன் விளக்கப்படம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு, **A** நஃபீஸ் அஹமத்,, தலைவர் : **98418 03685**

திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : **87783 12823**

**திரு இராதாகிருஷ்னன்,** மேலாளர் : **75500 50326**

**E- Mail** : **acmchennai2001@yahoo.co.in**

**Website** : **anticorruptionchennai.com**

## செயற்குழுக் கூட்டம் (20-01-2024)

இன்று (20 ஜனவரி 2024) நமது இயக்க மாதாந்திர செயற்குழுக் கூட்டம் நமது தலைமையகத்தில் நடைபெற்றது. பொது செயலாளர், ஐந்து செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். நமது சட்ட வழக்கறிஞர் திரு ந. சுப்ரமணியன் அவர்களும் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் உப தலைவர் கலந்து கொள்ளாததால் , பொது செயலாளர், A நஃபீஸ் அஹமத் அவர்களைத் தலைமை தாங்கி நடத்துமாறு கேட்டுக்கொண்டார், அந்த அழைப்பை ஏற்று திரு A நஃபீஸ் அஹமத் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு டிசம்பர் மாத வரவு செலவு கணக்கு நிதிச் செயலாளரால் வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. இயக்கத்தின் நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதுமில்லையென அறிவிக்கப்பட்டது

3. நமது இயக்கத்தின் உறுப்பினராக கீழ்க்கண்ட **26** பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

**ஆண்டு உறுப்பினர்கள்**

1. **திரு பத்பநாபன்**
2. **திரு இதய குமார்**
3. **திரு கோவிந்தன்**
4. **திரு சீனிவாசன்**
5. **திரு சேட்டு**
6. **திரு பெரியசாமி**
7. **திரு அனந்தன்**
8. **திரு சுந்தர மூர்த்தி**
9. **திரு இரவிச்சந்திரன்**
10. **திரு பெரிய நாயகி**
11. **திரு ராஜகோபால்**
12. **திரு பாரதி லூயி**
13. **திரு சுகுன்ராஜ்**
14. **திரு ராமு**
15. **திரு சூரிய குமார்**
16. **திரு இளைய ராஜன்**
17. **திரு திவாகர்**
18. **திரு சந்துரு**
19. **திரு வசீகரன்**
20. **திரு ராஜ் குமார்**
21. **திரு அருண்குமார்**
22. **திரு கலையரசன்**
23. **திரு புகழேந்தி**
24. **திரு புரட்சி வேந்தன்**
25. **திரு பிரபாகர்**
26. **திரு சரவணக் குமார்**

எல்லா விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டு உறுப்பினராகிறார்கள்.

4. அடையாள உறுப்பினர் அட்டைகள், உரிய நேரத்தில் அனுப்பப் படவில்லையெனப் புகார் வந்துள்ளது. திருச்சி மாவட்ட நிதிச் செயலாளர் திரு அரங்க ராஜன் அவர்கள் அதை முறைப்படி உரிய காலவறைக்குள் அனுப்ப ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். அவரும் அலுவலக மேலாளரும் சேர்ந்து இறந்துவிட்ட சில ஆயுள் உறுப்பினர்களின் விவரங்களைக் கண்டுபிடித்து (உறுதி செய்து) அவர்களது பெயர்களை நீக்க பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறாரகள்.

5. நமது வெளியீட்டுச் செயலாளர் திரு கோவிந்தசாமிஅவர்கள் தன்னுடைய வீட்டுக்கு அருகில், சிலர் அரசாங்க நிலத்தை ஆக்ரமித்ததாக புகார் கொடுத்திருந்தார். நமது சட்ட செயலாளர் திரு A நஃபீஸ் அஹமத் அவர்கள் அவ்விடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு மேற்படி ஆலோசனை கூறுமாறு செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

6. புதிதாக நமது இயக்கத்தின் **Bye Law** ஆங்கிலத்தில் மறு அச்சு செய்யப்பட்டுள்ளது அதன் ப்ரூஃப் (**Proof Checking)** சரிபார்க்க நமது வெளியீட்டு செயலாளர் திரு கோவிந்ததசாமியைக் கேட்டுக்கொள்கிறது.

7. பள்ளிகளில் ஊழல் எதிர்ப்பு சொற்பொழிவுகள் நடத்தி, வருங்கால இளைஞர்களை ஊழலற்ற சமூகமாக நன்முறைப்படுத்த வேண்டும். இதற்காக நமது இயக்கத்தின் செயலாளர்கள் திரு ரவிக் குமார் அவர்களும் திரு சாந்த குமார் அவர்களும் தகுந்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

8. மேலாளர் திருமதி பாக்ய லட்சுமி அவர்கள் வேலையை ராஜினாமா செய்ய விண்ணப்பித்துள்ளார். அவருக்குப் பதிலாக திரு ராதா கிருஷ்ணன் அவர்களை நியமனம் செய்ய இந்த செயற்குழுவில் முடிவு எடுக்கபட்டுள்ளது.

9 . நமது இயக்கத்தின் தலைவர் பதவி காலியாக உள்ளது. இதை **Co-Opt** மூலமாக நிறை செய்ய , பொது செயலாளர், திரு A நஃபீஸ் அஹமத் அவர்களைத் தலைவர் பதவியை ஏற்குமாறு முன் மொழிந்தார். அதை நமது நிதிச்செயலாளர் திரு பாலாஜி அவர்கள் வழி மொழிந்தார். அது செயற்குழுவின் தீர்மானத்திற்குப்பிறகு திரு A நஃபீஸ் அஹமத் அவர்கள் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

10. நமது தலைமை அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதிற்குப் பதில் சொந்தமாக அலுவலகம் அமைத்தால் நல்லதென செயற்குழு கருதுகிறது. அதற்காக 15 லட்ச ரூபாய் மதிப்புக்குள் ஏதாவது கட்டிடம் அமைந்தால் அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

11. இயக்கத்துக்கு சொந்தமான கீழ்க்கண்ட சில கழிவுப்பொருட்கள் /உபயோகம் முடிந்த (Unserviceble) கருவிகள் தேவையில்லாமல் குப்பையாக சேர்ந்து உள்ளது. அவைகளை கழிவாகக் கணக்கில் கொண்டு பழைய பொருள் கடைக்காரனிடம் விற்றுவிட முடிவு எடுக்கப்பட்டது.

- **UPS : 1 No**
- **Battery : 2 Nos**
- **Speaker : 2 Nos**
- **KeyBoard : 2 Nos**
- **Wall Clock : 1 No**
- **Lamination Machine : 1 No**

12. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| **A** நஃபீஸ் அஹமத் | **வே கார்த்திகை ராஜன்** |
| **தலைவர்** | **பொது செயலாளர்** |

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன</u>**.**
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .
**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# பலிகடாவாகும் பொதுக் கல்வி! களம் காணும் கல்வியாளர்கள்!

***-க.யோகராஜன்***
**January 17, 2024 (ARAM Online)**







முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தற்போது கல்வித் துறையில் கடும் நெருக்கடிகள்! நம் சமுதாயத்தை பல நூற்றாண்டு பின்னுக்கு இழுக்கும் சூட்சும முயற்சிகள் கல்வித் துறையில் கட்டி எழுப்பப்படுகின்றன, ஆட்சியாளர்களால்! இதை மௌனமாக வேடிக்கை பார்க்க முடியாத கல்வியாளர்கள் செய்யப் போவது என்ன..? கல்விக்கான வாய்ப்பு சுருக்கப்படுகிறது, நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுகிறது, கல்வியின் தன்னாட்சி உரிமை பறிக்கப்படுகிறது..! கல்வியை முழுக்க, முழுக்க தனியார் மயம், வணிக மயம் ஆக்குவதற்கான மடைக் கதவுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள், பேராசிரியர்கள் முதலானோர் வெறும் ஒப்பந்த கூலிகளாக பார்க்கப்படும் அவலங்கள் அரங்கேறிக் கொண்டுள்ளன! கல்வித் துறையை காவி மயமாக்கவும், கார்ப்பரேட்டுகள் வசமாக்கவுமான முன்னெடுப்புகள் வேகம் பெற்றுள்ளன!

இத்தகைய சவாலான சூழ்நிலையில், ஜனவரி 27, 2024 அன்று சென்னை, சேப்பாக்கம் பத்திரிக்கையாளர்கள் கில்டு அரங்கத்தில் மாநில அளவில் **பொதுக் கல்வி பாதுகாப்பு மாநாடு** நடைபெற்றது. அகில இந்தியக் கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் தமிழகக் கிளை இந்த மாநாட்டை நடத்தியது. தேசிய கல்விக் கொள்கையில் உள்ள (NEP 2020) பல்வேறு அபாயகரமான அம்சங்களை பட்டியலிட்டு கல்வியாளர்கள் மாநாடு விவாதித்தது. அது பற்றிய இந்தக் கட்டுரையாகும்.

சுதந்திர இந்தியாவில், கல்வி முறை முற்போக்கு சிந்தனையை அடித்தளமாகக் கொண்டிருக்க வேண்டும் என ராஜாராம் மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், ஜோதி ராவ் பூலே, சுப்பிரமணிய பாரதி உள்ளிட்ட இந்திய மறுமலர்ச்சியுக முன்னோடிகள் தம் மனக் கண்ணால் கண்டனர். மதச்சார்பற்ற, அறிவியல், ஜனநாயக மனித மதிப்புகளைச் செழித்து வளர்க்கக் கூடிய கல்விக் கட்டமைப்பும், சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களும் பெறும் வண்ணம் இருக்க வேண்டும் என்பதே அவர்களின் தொலைநோக்குப் பார்வை. அதேபோல் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இந்திய விடுதலைப் போராட்டத்தை கட்டி எழுப்பிய காந்தி, நேரு, அபுல் கலாம் ஆசாத் போன்ற மாபெரும் தலைவர்களும் அனைத்துப் பிரிவு மக்களையும் உள்ளடக்கிய ஒரு சமத்துவமான கல்வி அமைப்பைத் தோற்றுவிப்போம் என்று உறுதி பூண்டு அதை மக்களிடம் வாக்குறுதிகளாகவும் அளித்தனர்.


ஆனாலும், சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் ஆன பிறகும், இந்த உன்னதமான நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. நமது நாட்டில் கல்வி என்பது விற்பனைப்பண்டமாக மாற்றப்பட்டு கல்வி வணிகர்களின் கடைச்சரக்காகத் தாழ்ந்து விட்டது. விடுதலை மூலம் பெற்ற அதிகாரமானது பொது மக்களின் கரங்களுக்கு வராமல் , மக்களின் நலனிற்கு எதிரான நலன்களைக் கொண்டுள்ள ஆளும் வர்க்கத்தின் பிடிகளுக்குள் சென்றுவிட்ட நிகழ்வே, இன்றைய துயரமான நிலைக்கான மூலகாரணமாகும். விடுதலை பெற்ற ஆரம்ப நாட்களில் கல்வி மீது இப்படிப்பட்ட வெளிப்படையான தாக்குதல்கள்

நடைபெறவில்லை, ஆனால் நாட்கள் செல்லச் செல்ல இந்தத் தாக்குதல்கள் இரக்கமற்று நடைபெற்று வருகின்றன.

குறிப்பிடத்தக்க இத் திருப்பு முனை தேசியக் கல்விக் கொள்கை 1986 அறிமுகப்படுத்தப்பட்டவுடன் தொடங்கியது. இக்கொள்கை, கல்வியைத் தனியார் மயம், வணிக மயம் ஆக்குவதற்கான மடைக்கதவைத் திறந்து விட்டதோடு, கல்வி என்பது தனியார் முதலீடு செய்து லாபம் பெறுவதற்கான ஒரு தனித்துவக் களம் என்று வெளிப்படையாகவே அறிவித்தது. அதனைத் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்ட கொள்கைகளான மாவட்ட தொடக்க கல்வி திட்டம் ( DPEP), அனைவருக்கும் கல்வி திட்டம் ( SSA), கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தடையில்லாத் தேர்ச்சி அல்லது பள்ளியில் சேர்ந்தாலே தேர்ச்சி போன்ற கொள்கைகள் நாட்டின் கல்வித் தரத்தை சீரழித்து விட்டன.

இந்த பின்னணியில்தான் தற்போதைய பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம் தேசிய கல்விக் கொள்கை 2020 ஐ (NEP 2020) கொண்டு வந்தது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு கல்விக் கொள்கையை திருத்துகிறோம் என்ற பகட்டான விளம்பரத்தோடு கொண்டு வந்தனர். ஆனால் ஏற்கனவே நிலவி வருகின்றச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு மாறாக NEP 2020 பொதுமக்களின் நலன்களை காவு கொடுத்து விட்டு கார்ப்பரேட் நலன்களுக்கு ஆதரவான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பன்னிரெண்டாம் வகுப்பு வரை தேர்வுகளுக்கு முக்கியத்துவமே இல்லை என்கிறது.


ஒன்றிய அரசின் தேசிய தேர்வு முகமை நடத்தும் தேர்வு மட்டுமே மாணவனின் உயர்கல்வியைத் தீர்மானிக்கும் ஒற்றை வழியாக இருக்கும். மேலும் மிகவும் முக்கியமான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை ரத்து செய்கிறது. இது கலை, அறிவியல், வர்த்தகம் போன்ற பல்வேறு பாடப்பிரிவுகளில் எந்த வேற்றுமையும் இல்லை என்கிறது, அறிவியல் பூர்வமாக கற்பதை அழிக்கப் பார்க்கிறது. இந்திய அறிவு முறைமையை (INDIAN KNOWLEDGE SYSTEM – IKS) கல்வியின் அனைத்து மட்டத்திலும் செயற்கையாகப் பொருத்துவதன் மூலமாக கல்வியை மதமயமாக்க NEP 2020 எத்தனிப்பது மிகவும் அபாயகரமான போக்காகும்.




இன்றைய நவீன அறிவியல் மிக நுட்பமாகவும் விரிவாகவும் வளர்ந்திருக்கிறது. அதோடு ஒப்பிடும் போது NEP 2020 குறிப்பிடும் பண்டைய இந்திய அறிவியல் முறை மிக மிக பின்தங்கியது. பண்டைய இந்திய அறிவு முறையை (IKS) வலுக்கட்டாயமாக பாடத்திட்டத்தில் நுழைப்பது என்பது காலாவதியாகிப்போன, நிலப்பிரபுத்துவ, மூட நம்பிக்கை, அறிவிற்கு முரண்பட்ட பண்டைய சிந்தனைகளை இன்றைய தலைமுறை மாணவர்களிடம் திணிப்பதாகும். இதன் மூலம் அறிவியல் பூர்வமான வரலாற்று உண்மைகளை திரித்துத் தவறான மதவாதக் கருத்துக்களைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது.

` எல்லாவற்றிற்கும் மேலாக NEP 2020 ஆறாம் வகுப்பு முதலே “கல்வியைத் தொழில் மயம் ஆக்குவதற்கு” பரிந்துரைக்கிறது. இது, மாணவர்களுக்கு, பல்வேறு பாடங்களை ஒன்றிணைத்து படித்து ஒரு முழுமையான அறிவைப் பெறுவதற்குத் தடையை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும். ஒவ்வொரு பள்ளியிலும் முறையான கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதற்கு மாறாக, இருக்கக் கூடிய கட்டமைப்புகளையும் வசதிகளையும் பகிர்ந்து கொள்கிறோம் என்ற பெயரில் “பள்ளித் தொகுப்புகள்” எனும் School complexes உருவாக்குவதற்கு பரிந்துரைத்துள்ளது. ஆனால் எதார்த்தத்தில் இது கிராமப்புறங்களில் உள்ள ஆயிரக்கணக்கான பள்ளிகளை மூடுவதற்கு இட்டுச்

செல்லும். இதனால் கிராமப்புற சாமானிய மாணவர்கள் பல்லாயிரக்கணக்கானோர் கல்வி வாய்ப்பை இழக்கின்றனர். இருக்கும் சிக்கல்களை NEP 2020 உயர்கல்வியில் மேலும் மேலும் அதிகரிக்கிறது. கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில், ஏன் ஐஐடிகள் போன்ற மதிப்பு மிக்க கல்வி நிறுவனங்களில் கூட ஆயிரக்கணக்கான ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்கு மாறாக கௌரவ, ஒப்பந்த, பகுதி நேர ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம் கல்வியின் தரம் சீரழிக்கப்படுகிறது.






“பல நுழைவு பல வெளியேற்றம்” (Multiple Entry and Multiple Exit) என்ற அடிப்படையில் நான்கு வருட இளநிலை பட்டப்படிப்புகளை இந்த கொள்கைப் பரிந்துரைக்கிறது. இதற்குக் கல்லூரிகளில் இருந்தும் பல்கலைக்கழகங்களில் இருந்தும் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

இத்தகைய மோசமான பரிந்துரைகளை கொண்டுள்ள NEP 2020, வரைவுக் கொள்கையாக 2019ல் வெளியிடப்பட்டது முதலே, அகில இந்தியக் கல்விப் பாதுகாப்புக் கமிட்டி (AISEC) கடுமையாக எதிர்த்து வருகிறது. இத்தகைய மோசமான கொள்கைக்கு எதிராக ஒத்த கருத்துடைய அமைப்புகளுடன் சேர்ந்தும், தனியாகவும் நாடு முழுவதிலும் போராட்ட இயக்கங்களை அகில இந்தியக் கல்விப் பாதுகாப்புக் கமிட்டி நடத்தி வருகிறது.

இதன் மூலம் கல்விக்குப் பேராபத்தை விளைவிக்க இருக்கும் இக் கல்விக் கொள்கையை மிகுந்த கவலையோடு பார்க்கக் கூடிய புகழ் பெற்ற கல்வியாளர்கள், அறிவியலாளர்கள், வரலாற்று அறிஞர்கள், தேச சர்வதேச அறிவு ஜீவிகள், அதோடு பொதுமக்களையும் அகில இந்தியக் கல்விப் பாதுகாப்புக் கமிட்டி தன் பால் ஈர்த்துள்ளது. நேரடியான மற்றும் இணைய வழியிலான கருத்தரங்கங்கள், பயிலரங்கங்கள், மாநாடுகள், எதிர்ப்பு போராட்ட இயக்கங்கள் ஆகியவற்றை பல்வேறு மாநில அளவிலும் தேசிய அளவிலும் நடத்தி இந்த கொள்கையின் ஆபத்தான கருத்துக்களை அம்பலப்படுத்தியதன் மூலம் பரந்த ஆதரவைப் பெற்றுள்ளது. இந்த மோசமான NEP 2020 கொள்கையைத் திரும்ப பெற்று அதற்கு மாறாக மதச்சார்பற்ற, விஞ்ஞானபூர்வ, ஜனநாயகபூர்வ, அனைவருக்குமான கல்வியை உத்திரவாதப்படுத்தும் உண்மையான மக்கள் நலக் கல்விக் கொள்கையைக் கொண்டுவர வலியுறுத்த உள்ளது.

அரசுப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டு பொதுக் கல்வி அமைப்பையே நிர்மூலமாக்கும் பணியை மத்தியில் ஆளும் பாஜகவும் மாநிலத்தில் ஆளும் திமுக அரசாங்கங்கள் போட்டி போட்டுக் கொண்டு செய்து வருகின்றன. எனவே, பொதுக் கல்வி அமைப்பை பாதுகாக்கக் கோரி, அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் தமிழ்நாடு (AISEC) மாநில அமைப்பு சார்பில் பல்வேறு கூட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக பொதுக் கல்வி பாதுகாப்பு மாநாடு நடைபெற உள்ளது. இதில் புகழ்பெற்ற கல்வியாளர்கள், அறிஞர்கள் உரையாற்ற உள்ளனர். மக்களின் அடிப்படைக் கல்வி உரிமையை பாதுகாக்கக் கோரி நடைபெறும் இம்மாநாட்டை மாபெரும் வெற்றி பெற வைக்க தங்களால் இயன்ற அனைத்து ஆதரவையும், பங்களிப்பையும் வழங்கக் கோரி அறைகூவி அழைக்கிறோம்.

கல்வி மீது கொடிய தாக்குதல் நடத்தப்படும் இந்தநேரத்தில் மதச்சார்பற்ற, அறிவியல்பூர்வ, சனநாயகபூர்வக் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் வகையில் கல்வி அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காக AISEC

போராடும் இந்த நெருக்கடியான நேரத்தில் நாட்டில் உள்ள நல்லெண்ணம் கொண்ட குடிமக்கள், கல்வியாளர்கள், அறிவுஜீவிகள் கரங்கோற்க வருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம். கல்வியை எதிர்வரும் தலைமுறைக்கு பாதுகாத்துக் கொடுப்பதற்காக நாம் எல்லோரும் கரம் கோர்ப்போம்.

ஜனவரி 27, 2024 – பத்திரிக்கையாளர்கள் கில்டு, சேப்பாக்கம், சென்னையில் முழு நாள் நிகழ்வாக நடக்க உள்ளது. இந்த மாநாட்டின் நோக்கங்களை கோஷங்களாக வைத்துள்ளோம்; மேற்படியான விவகாரங்கள் குறித்தே விவாதிக்க உள்ளோம். இந்த மாநாடு பேரா தி.மருதநாயகம் தலைமையில் நடக்க உள்ளது. பேரா S. ரகுரதி பாண்டியன், (AISEC, தமிழ்நாடு) வரவேற்புரை ஆற்ற உள்ளார்.

**மத்திய, மாநில அரசாங்கங்களே…!**

- கல்வியை தனியார்மயம் வியாபாரமயம் ஆக்காதே!
- தனியார் பள்ளி கல்லூரிகளில் கல்விக் கட்டண கொள்ளையை தடை செய்!
- அரசுப் பள்ளிகளில் நிரந்தர அடிப்படையில் ஆசிரியர்களை நியமித்திடு!
- பகுதி நேர ஆசிரியர்களை நிரந்தரமாக்கு!
- தமிழ் வழி கற்றலை உறுதிப்படுத்து!
- பள்ளிகளில் EMIS முறையை முற்றிலுமாக கைவிடு !
- பள்ளிகளில் பாடச் சுமையை குறைத்திடு!
- வகுப்பு 1 முதல் 8 வரை தடையற்ற தேர்ச்சி முறையை கைவிடு!
- கற்றல் குறைபாட்டை சரி செய்திட நடவடிக்கை எடு!
- ஆசிரியர்களுக்கு கல்வி சாராதப் பணிகளை வழங்காதே!
- இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டம், நம்ம ஸ்கூல் திட்டம் உள்ளிட்ட NEP 2020 திட்டங்களை கைவிடு!
- உடற்கல்வி, ஓவிய ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிடு!
- கதவு, ஜன்னல், கழிப்பறை, மதில் சுவர் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தி பராமரித்திடு!
- நான் முதல்வன், ABC (NEP 2020) திட்டங்களை கைவிடு!
- பள்ளி கல்லூரிகளில் ஆசிரியர் அல்லாத நிர்வாக / தொழில்நுட்ப பணிகளுக்கான ஊழியர்களை நியமித்திடு!
- கல்லூரி பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்து!
- பல்கலைக்கழங்களில் பொதுப் பாடத்திட்டத்தை கைவிடு!
- மதுரை காமராசர், சென்னை பல்கலை கழகங்களில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு காண்!

. பேரா ஜ. காந்திராஜ் (மாநிலத் தலைவர் AUT), ச. மயில் (பொதுச் செயலாளர் தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி), ஆர். பெருமாள்சாமி (மாநிலத் தலைவர், தமிழ்நாடு பட்டதாரிகள் ஆசிரியர் கழகம்), பேரா பி.கே.அப்துல் ரஹிமான் ( சென்னை பல்கலைகழகம்), பழ.கௌதமன் (மாநிலத் தலைவர் ஒருங்கிணைந்த சிறப்பாசிரியர்கள் சங்கம்), கே.பாலகிருஷ்ணன் ( மாநில ஒருங்கிணைப்பாளர், ஐக்கிய விவசாயிகள் முன்னணி - SKM), எம்.ஜே.வால்டேர் (மாநிலத் தலைவர், அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம், தமிழ்நாடு), பேரா. சே. சோ. ராமஜெயம் (அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம்), ஆசிரியை சு.உமா மஹேஸ்வரி ( AISEC, மாநிலத் தயாரிப்புகுழு, தமிழ்நாடு), வி.பி. நந்தகுமார்( AISEC, அகில இந்திய செயற்குழு), பேரா க.யோகராஜன்( AISEC, மாநிலத் தயாரிப்பு குழு, தமிழ்நாடு) ஆகியோர் உரையாற்ற உள்ளனர்!

பேரா அ.கருணானந்தன் (மேனாள் துறைத் தலைவர், வரலாற்றுத் துறை விவேகானந்தா கல்லூரி), பேரா லெ.ஜவகர் நேசன்( மேனாள் துணை வேந்தர், ஜே எஸ் எஸ் பல்கலைக்கழகம்), பேரா ப.சிவக்குமார் (மேனாள் முதல்வர், குடியாத்தம் அரசு கல்லூரி), வா. அண்ணாமலை ( அகில இந்தியச் செயலாளர் – IFETO) பேரா. பிரான்சிஸ் குலோத்துங்கல் (AISEC, அகில இந்திய செயற்குழு உறுப்பினர், கேரளா ) ஆகியோர் பேரூரை ஆற்ற உள்ளனர். இறுதியில் லெனா குமார் நன்றியுரை வழங்க உள்ளார்.

**கட்டுரையாளர்; க.யோகராஜன் (AISEC – மாநில தயாரிப்பு குழு உறுப்பினர்)**
**கல்விச் செயற்பாட்டாளர்**

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**

**Savings A/C No: 000901000041657**

## (மிகவும் சிந்திக்கத் தூண்டும் செய்தி)

ஒவ்வொரு படத்துக்கும் 50 கோடி, 100 கோடி என்று இந்த சினிமா நடிகர்கள் நடிகைகள் என்ன செய்வார்கள் என்பது எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

சிறந்த விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் போன்றவர்கள் ஆண்டுக்கு 10 லட்சம் முதல் 20 லட்சம் ரூபாய் வரை சம்பாதிக்கும் நாட்டில், ஒரு திரைப்பட நடிகர் ஆண்டுக்கு 10 கோடி முதல் 100 கோடி ரூபாய் வரை சம்பாதிக்கிறார்! எல்லாவற்றிற்கும் மேலாக அவர் என்ன செய்கிறார்? நாட்டின் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பு என்ன? எல்லாவற்றிற்கும் மேலாக, நாட்டின் தலைசிறந்த விஞ்ஞானிகளுக்கு 100 ஆண்டுகள் பிடிக்கும் அளவுக்கு ஒரே வருடத்தில் இவ்வளவு சம்பாதிக்க அவர்கள் என்ன செய்கிறார்கள்!

இன்று, நாட்டின் புதிய தலைமுறையினரைக் கவர்ந்த மூன்று பகுதிகள் சினிமா, கிரிக்கெட், அரசியல். இம்மூன்று துறைகளைச் சேர்ந்தவர்களின் சம்பாத்தியமும், கௌரவமும் எல்லா வரம்புகளுக்கும் அப்பாற்பட்டது. இந்த மூன்று பகுதிகளும் நவீன இளைஞர்களின் இலட்சியங்கள் ஆகும், அதே நேரத்தில் அவர்களின் நம்பகத்தன்மை தற்போது கேள்விக்குறியாக உள்ளது.

அதனால் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் பயனில்லை. பாலிவுட்டில் போதைப்பொருள் மற்றும் விபச்சாரம், கிரிக்கெட்டில் மேட்ச் பிக்சிங், போக்கிரித்தனம் மற்றும் அரசியலில் ஊழல். இதற்கெல்லாம் பணம்தான் முக்கிய காரணம், இந்தப் பணத்தை அவர்களிடம் கொண்டு சேர்ப்பது நாம்தான். சொந்த பணத்தை எரித்து நாமே தீங்கிழைக்கிறோம். இது முட்டாள்தனத்தின் உச்சம்.

- 70-80 ஆண்டுகளுக்கு முன்பு வரை பிரபல நடிகர்கள் சாதாரண சம்பளம் பெற்று வந்தனர்.
- 30-40 ஆண்டுகளுக்கு முன்பு, கிரிக்கெட் வீரர்களின் சம்பாத்தியமும் சிறப்பாக இல்லை.
- 30-40 ஆண்டுகளுக்கு முன்பு அரசியலில் இவ்வளவு கொள்ளையடிக்கப்படவில்லை.

மெதுவாக அவர்கள் எங்களை கொள்ளையடிக்க ஆரம்பித்தனர், நாங்கள் அவர்களை மகிழ்ச்சியுடன் கொள்ளையடிக்க அனுமதித்தோம். இந்த மாஃபியாக்களின் பிடியில் சிக்கி, நம் குழந்தைகளின் எதிர்காலத்தையும், நம் நாட்டையும் அழித்துக் கொண்டிருக்கிறோம்.

50 ஆண்டுகளுக்கு முன்பு, திரைப்படங்கள் இவ்வளவு அசிங்கமாகவும், ஸ்லோவாகவும் எடுக்கப்படவில்லை. கிரிக்கெட் வீரர்களும் அரசியல்வாதிகளும் அவ்வளவு திமிர்பிடித்தவர்கள் அல்ல. இன்று நம் கடவுளாக (?) மாறிவிட்டார்கள். இப்போது அவர்களைத் தலையில் இருந்து தூக்கி அறைந்து அவர்களின் நிலையை அறிந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒருமுறை, அப்போதைய வியட்நாம் அதிபர் ஹோ-சி-மின், இந்திய அமைச்சர்களை சந்திப்பதற்காக இந்தியா வந்தபோது, "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

இந்த மக்கள் சொன்னார்கள் - "நாங்கள் அரசியல் செய்கிறோம்."

அவரால் இந்தப் பதிலைப் புரிந்து கொள்ள முடியவில்லை, அதனால் அவன் மீண்டும் கேட்டார் - "அதாவது, உங்கள் தொழில் என்ன?"

இந்த மக்கள் சொன்னார்கள் - "அரசியல் எங்கள் தொழில்."

ஹோ-சிமின் கொஞ்சம் கோபமடைந்து சொன்னார் - "ஒருவேளை உங்களுக்கு என் அர்த்தம் புரியாமல் இருக்கலாம். நானும் அரசியல் செய்கிறேன், ஆனால் தொழிலால், நான் ஒரு விவசாயி, நான் விவசாயம் செய்கிறேன். விவசாயம்தான் என் வாழ்வாதாரம். காலையிலும் மாலையிலும் நான் எனது வயல்களுக்குச் செல்லுங்கள், நான் வேலை செய்கிறேன், பகலில் ஜனாதிபதியாக எனது பொறுப்பை நான் செய்கிறேன்.

ஹோ-சி-மின் மீண்டும் அதையே கேட்டபோது, தூதுக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தோளைத் தட்டிவிட்டு சொன்னார் - "அரசியல் எங்கள் தொழில்."

இதற்கு இந்தியத் தலைவர்களிடம் பதில் இல்லை என்பது தெளிவாகிறது. பின்னர், இந்தியாவில் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரம் அரசியலால் ஆதரிக்கப்படுவதாக ஒரு கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. இன்று இந்த எண்ணிக்கை கோடிகளை எட்டியுள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு, கொரோனாவால் ஐரோப்பா அழிந்து கொண்டிருக்கும் போது, மருத்துவர்கள் பல மாதங்கள் தொடர்ந்து கொஞ்சம் கூட ஓய்வெடுக்கவில்லை, அப்போது ஒரு போர்ச்சுகல் மருத்துவர் கோபமாக கூறினார் - "ரொனால்டோவிடம் செல்லுங்கள், நீங்கள் மில்லியன் கணக்கான டாலர்களைக் கொடுப்பீர்கள். பார்க்க. எனக்கு சில ஆயிரம் டாலர்கள் மட்டுமே கிடைக்கும்."

விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் அல்லாமல், நடிகர்கள், அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள் என இளம் மாணவர்களின் சிலையாக இருக்கும் நாட்டில் அவர்களுக்கே பொருளாதார முன்னேற்றம் இருக்கலாம், ஆனால் நாடு ஒருபோதும் முன்னேறாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். சமூக, அறிவு, கலாச்சார, மூலோபாய ரீதியாக நாடு எப்போதும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கும். அத்தகைய நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் எப்போதும் ஆபத்தில் இருக்கும்.

எந்த நாட்டில் தேவையில்லாத, சம்பந்தமில்லாத துறையின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறதோ, அந்த நாடு நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டே இருக்கும். நாட்டில் ஊழல்வாதிகள் மற்றும் தேசவிரோதிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும். நேர்மையான மக்கள் ஓரங்கட்டப்பட்டு, கடினமான வாழ்க்கையை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

திறமையான, நேர்மையான, மனசாட்சியுள்ள, சமூக சேவகர்கள், போர்க்குணமிக்க மற்றும் தேசபக்தியுள்ள குடிமக்களை வளர்த்து மேம்படுத்துவதற்கான சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

**ஒரு உண்மையான இந்தியருக்கு உண்மையிலேயே ஒரு கண் திறக்கும் செய்தி**

**நமது தார்மீக திவால்நிலையை சுயபரிசோதனை செய்வது மதிப்பு. நாம் என்ன செய்கிறோம் நாம் எங்கு செல்கிறோம்?**

---

## <u>நீரோடும் ஆறுகளே நம் வாழ்வாதாரங்கள்..!</u>

*-தமிழ்தாசன்*
**January 15, 2024**

நம் வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கும் இயற்கை பற்றிய புரிதல் இன்றியே நாம் வாழ்கிறோம். தமிழ் மண்ணுக்கும், மக்களுக்கும் வாழ்வாதாரமாக உள்ள ஆறுகள் அழிவை நோக்கி சென்று கொண்டுள்ளன! அவற்றை மீட்டெடுக்கும் நோக்கமே இந்த தொடர்! இது தமிழ்நாட்டில் ஓடும் இயற்கை நீர் வழித் தடங்களின் ஆவணம்!






ஆறுகள் மனித சமூகத்தின் நாகரிகத் தொட்டிலாக விளங்குகின்றன. உலகின் பல்வேறு தொன்மையான நகரங்கள் ஆற்றங் கரைகளில் தான் அமைந்துள்ளன. எனவே, ஆறுகள் பண்பாட்டு முக்கியத்துவம் பெறுகின்றன. உலகெங்கும் ஆறுகள் வேளாண்மை, குடிநீர் ,மின்னாற்றல், தொழிற்கூட பொருளுற்பத்திக்கு அடிப்படைத் தேவையாக இருக்கின்றன. தனியார் மய நெருக்கடியில் நீர் என்பது பண்டமாகிவிட்டது. எனவே, ஆறுகள் பொருளியல் முக்கியதுவம் பெறுகிறது. உலக தேசங்கள், மாநிலங்கள், வட்டார எல்லைகள் ஆறுகளைக் கொண்டே தீர்மானிக்கபடுகின்றன.

**உலகில் 23% பன்னாட்டு தேச எல்லைகள்,**

**17% மாநில எல்லைகள்,**

**12% வட்டார எல்லைகள்**

**ஆறுகளைக் கொண்டே வரையறுக்கப்பட்டுள்ளதாக (GSRB) ஆய்வுகள் கூறுகின்றன.**

எனவே, ஆறுகள் அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆறுகள் என்பது நீரோடும் குழாய்களல்ல. ஆறு என்பது இரு கரைகளுக்குள்ளாக வெள்ளம் அல்லது கழிவுநீர் வடிந்தோடும் நீரியல் அமைப்பு என்கிற புரிதலில் இருந்தே பெரும் தொழிற்சாலை நடத்துபவர்களின் நலனுக்காக ஆறுகள் கண்மூடித்தனமாக சிதைக்கப்பட்டு நகரங்கள் எழுப்பப்படுகின்றன.

ஆறுகளின் உயிர்சூழல் தான் பண்பாட்டு – பொருளியல் – அரசியல் கட்டுமானங்களுக்கு அடித்தளமாக விளங்குகிறது. ஒப்பிட்டளவில் ஆறுகளின் சூழலியல் முக்கியத்துவம் பற்றி உலகில் உள்ள எந்த அரசுகளும் கவலை கொள்வதில்லை. ஆறுகளின் இயல்பை பாதுகாப்பதும், மீட்பதும் தான் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும்.

ஆளும் அரசுகளால், பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களின் நலனுக்காக வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் காடுகள், மலைகள், ஆறுகள், கடல், பல்லுயிரியச் சூழல் என இயற்கை வளங்கள் வரைமுறையின்றி வேட்டையாடப்படுகின்றன. இயற்கை வளங்கள் மீதான வன்முறைத் தொடரவும் நாளுக்கு நாள் அதிகரிக்கவும் செய்கின்றன.

இப்போக்கு கால நிலை மாற்றத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. புவி வெப்பமயமாதல் அதிகரிக்கிறது. புயல், பெருமழை, வெள்ளம், வறட்சி உள்ளிட்ட ஒவ்வொரு பேரிடருக்கும் அடுத்த பேரிடருக்குமான இடைவெளி குறைந்திருக்கிறது. கால நிலைமாற்றம் ஏற்படுத்தும் கொடிய விளைவுகள் அனைத்துயிர்களையும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. பல உயிரினங்கள் அழிவின் விளிம்பு நிலைக்கு சென்று இருக்கின்றன. பல உயிரினங்கள் அற்றுப் போய்விட்டன. உழைக்கும் ஏழை,எளிய விளிம்பு நிலை மக்களே பேரிடர்களில் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். சூழலியல் அகதிகளாக ஆக்கப்படுகிறார்கள்.





ஆறுகளின் குறுக்கே கட்டப்படும் பெரிய அணைகள் ஆறுகளின் நீரோட்டத்தை, ஆற்றின் பல்லுயிரியச் சூழலை, அதன் பரவலை, ஆறுகள் மற்றும் கடல் உயிரிகளின் உணவை, ஊட்டச் சத்தை முற்றிலும் சிதைத்து விடுகின்றன. ஆறுகள் வேர்பிடித்து தோன்றும் காட்டுப் பகுதியை அழித்துக் கட்டப்படும் சுரங்கங்கள், சாலைகள், சுற்றுலா விடுதிகள், அந்த மண்ணுக்குச் சம்பந்தமில்லாத அயல் தாவர பூங்காக்கள், வணிகப் பயிர்களான தேயிலை, தைல மற்றும் தேக்கு மரத் தோட்டங்கள், தண்ணீரைத் தேக்கி வைத்து வடிய விடும் காட்டின் இயல்பையும், சிற்றோடைகளின் நீர்வழித் தடங்களையும் சிதைத்து விடுகின்றன.

தொழிற்சாலை மற்றும் குடியிருப்பு கழிவுநீர் நேரடியாக ஆற்றில் விடப்படுகிறது. ஆற்று மணல் கொள்ளையால் ஆறுகள் தோலுரிக்கப்பட்ட எழும்புக் கூடுகாளாக ஆக்கப்பட்டுள்ளன. நகரமயக்களால் ஆறுகளின் வழித்தடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு

சுருக்கப்பட்டுள்ளன. கரையோரம் பக்கவாட்டில் சுவர்கள் எழுப்பப்பட்டு ஆறுகள் ஒரு கால்வாயைப் போல மாற்றப்பட்டுள்ளன. ஆற்றின் உயிர்ச் சூழல் கவலைக்கிடமான நிலையில் உள்ளது. எனவே, புயல்வெள்ளம் ஏற்படுத்தும் சேதங்களில் மீளமுடியாத இழப்புகளை மானுடச் சமூகம் சந்திக்கிறது.

**நகர்புற வளர்ச்சி ஆற்று வழித் தடங்களை ஆக்கிரமித்தே எழுப்பப்படுகின்றன**..!

தமிழ்நாட்டில் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை போன்ற பெரிய ஆறுகளின் நிலையே இவ்வாறு உள்ள சூழ்நிலையில் சிற்றாறுகள், ஓடைகள் நிலை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எல்லா பெரிய நதிகளும் சிறிய மலையோடைகளில் இருந்து தான் துவங்குகின்றன. பல சிற்றாறுகளின் கூட்டிணைவு தான் பேராறுகள். கவலைக்கிடமாகிக் கிடக்கும் பேராறுகளின் நலம் விசாரிப்புகள் மலையோடைகளில் இருந்தும் சிற்றாறுகளில் இருந்தும் துவங்க வேண்டும். அதற்கு நம் மலையோடைகள், சிற்றாறுகள் பற்றிய உரையாடல்கள் நிகழ வேண்டும். ஆறு, நதி, ஓடை, வாரி, பள்ளம், நல்லா, பாய்ச்சி என மக்கள் பெயர் சூட்டியுள்ள இயற்கையான நீரோடும் வழித்தடங்களை நோக்கி 'ஆறுகளைத்தேடி'என்கிற என் ஆற்றலுக்குட்பட்ட இந்த பயணத்தை துவங்குகிறேன்.

முழு வீதியையும் மூழ்கடிக்கும் பேரிடர்கால வெள்ளம், நம் வீட்டு கதவுகளின் கழுத்தை நெரிக்கிற போதெல்லாம் நீர்வழித் தடங்கள் குறித்த கரிசனம், உரையாடல்கள் உயிர்ப் பெறுகின்றன. வெள்ளம் வடிவதற்குள் நீர்வழித் தடங்கள் குறித்த சலசலப்புகளும் வடிந்து விடுகிறது. அடுத்த பேரிடர் வரும் வரை உறக்க நிலைக்குச் செல்லும் உரையடல்களை நீட்டிக்கச் செய்யும் சிறு முயற்சியாக இயற்கை நீர் வழித்தடங்களை ஆவணம் செய்யும் 'ஆறுகளைத் தேடி' என்கிற என் பயணம் வழியான உரையாடல் இருக்கும் என்று நம்புகிறேன்.

ஆறுகள் உருவாகும் இடம், ஆற்று நீர் வடிந்தோடும் வழித் தடங்கள், ஆறுகளும், மக்களுக்குமான உறவு, ஆறும் கடலும் சேருமிடம் என ஆறுகள் பற்றிய என் சேகரிப்புகளை இந்தப் பயணத்தின் நோக்கம் என்று திட்டமிட்டுள்ளேன். ஆறுகள் பற்றிய மேலும் அறிய வேண்டிய செய்திகளை அறிந்து கொண்டு ஆறுகளைத் தேடிப் பயணிப்போம்.

கட்டுரையாளர்; **தமிழ்தாசன் (எ) ஜான்சன் (37)**

---

## கொள்ளை லாபத்திற்கான கொழுத்த வியாபாரமா அரசியல்?

***-சாவித்திரி கண்ணன்***
February 3, 2024

*அரசியல் கட்சிகள் பெரு வியாபார நிறுவனங்களாக மாறி கோலோச்சுகின்றன! தலைவர்களே பிராண்ட் மாடல்கள்! 50 ஆண்டுகளுக்கு முன்பு அரசியல் கட்சிகள் இயங்கிய விதத்திற்கும் இன்றைக்கும் மலையளவு வேறுபாடுகள் உள்ளன! இந்தச் சூழலின் உருவாக்கத்தையும், போக்குகளையும் அலசுகிறது இந்தக் கட்டுரை;*

மக்களாட்சியில் கட்சிகளின் தோற்றத்துக்கு தேவைகள் இருந்திருக்கின்றன. நாட்டு விடுதலைக்காக காங்கிரஸ் கட்சி உருவானது. அன்றைக்கு காங்கிரஸ் ஒரு வரலாற்றுத் தேவை! அந்த வரலாற்றுத் தேவையின் பின்னணியில் இந்திய வணிகர்கள் தங்கள் நலன் சார்ந்து இருந்தனர். அதில் தலைவர்களாக இருந்த எல்லோரும் சொந்த செலவில் தான் கட்சிக்காக வேலை பார்த்தார்கள். அதே சமயம் அன்றே டாடா, பிர்லா உள்ளிட்ட தொழில் அதிபர்கள் காங்கிரஸ் கட்சியின் செயல் திட்டங்களுக்கு நன்கொடை தந்தனர்.


நாட்டின் விடுதலைக்காக சர்வ பரித் தியாகம் செய்வோர்கள் ஒரு புறமும், காங்கிரஸ் கட்சி என்ற கோதாவில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் பதவி, அந்தஸ்த்து, வாய்ப்புகளை பெற்று சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர்களும் காங்கிரஸுக்குள்ளேயே இருந்தனர். நாடு சுதந்திரம் பெற்று ஆட்சி அதிகாரத்தை முழுமையாக சுவைக்கத் தொடங்கி காலகட்டத்திலும் கூட ஓமந்தூர் ராமசாமி, ராஜாஜி, காமராஜ், கக்கன் போன்ற சுய நலமில்லாத நேர்மையான ஆட்சியாளர்கள் இருந்தனர். ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி பெரும் செல்வத்தை ஈட்டிய டி.டி.கே.கிருஷ்ணமாச்சாரி, ஜெகஜீவன்ராம்... உள்ளிட்ட ஊழல் பெருச்சாளிகளும் கணிசமாக இருந்தனர். காங்கிரஸ் கட்சியில் பிராமண ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்த காரணத்தால் தான் வ.உ.சிதம்பரம் போன்ற தியாகத் தலைவர்கள் புறக்கணிப்புக்கு உள்ளானார்கள்!

சுதந்திரத்திற்கு பிறகு எளிய மக்களை அரசியலில் பிரதிநிதித்துவப்படுத்தும் செயல்பாட்டில் காங்கிரஸ் கட்சி பெரிய அளவில் பின் தங்கி இருந்தது! இந்த காலகட்டத்தில் இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்றும் வண்ணம் திராவிட முன்னேற்றக் கழகம் வந்தது.

திமுக மக்களிடையே பரவிய போது பாமர மக்கள் இதில் இணைந்து தங்களை தாங்களே அர்ப்பணித்துக் கொண்டு கட்சியை வளர்த்தனர்.



அன்றைய வரலாறுகளைப் படிக்கும்போது, ஏராளமானோர் கட்சிக்காக தங்கள் சொத்துகளை செலவழித்து இழந்தது தான் தெரிய வருகிறது. இராம. அரங்கண்ணல் தன் சுயசரிதையில் தான் மைலாப்பூரில் 1967-இல் போட்டியிட்டது பற்றி எழுதி உள்ளார். அண்ணா இவருக்கு வாய்ப்புத் தந்த நிலையில், மயிலாப்பூரில் சென்று இறங்குகிறார். அங்கே இருக்கும் எளிய திமுக தொண்டர்கள் கூட்டம் போட்டு, ''நமக்காகப் போட்டியிட அரங்கண்ணல் வந்துள்ளார். அவருக்கு எந்த சிரமமும் இல்லாமல் நாம் கவனித்துக்கொள்ளவேண்டும். அவரை வெற்றி பெற வைக்கவேண்டும்" எனப் பேசி செயல்படுகிறார்கள். "கடைசிவரை தன்னிடம் தேர்தல் செலவுக்காக கட்சித் தொண்டர்கள் பத்து பைசா கூட கேட்கவில்லை.." என அவர் குறிப்பிடுகிறார். மிகவும் அடித்தட்டு நிலையில் இருந்த தொண்டர்களே முழுக்க உழைத்து செலவழித்து, அவரை வெற்றி பெற வைத்திருக்கிறார்கள்.





இப்படி ஒரு நிலையும் தமிழ்நாட்டில் இருந்தது என்று சொன்னால் இன்று யாரும் நம்பமாட்டார்கள். பணக்காரர்களையும், ஏழைகளையும் சரிவிகிதத்தில் வைத்து பேலன்ஸ் செய்து அவரவர் தேவையை கட்சிக்கு பயன்படுத்திக் கொள்ளும் நிலைமைகள் காமராஜர், அண்ணா காலத்தில் இருந்தது.

1960 களிலேயே பெரு நிறுவனங்கள் பலனடையும் வண்ணமும், விவசாயிகளை அவர்கள் சுரண்டிக் கொழுக்கும் வண்ணமுமாக விவசாய வளர்ச்சி என்ற பெயரில் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன! இதில் பலனடையும் பெரு நிறுவனங்கள் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் தேர்தல் நிதியை வழங்கினார்கள்! அப்போது தொடங்கி, தற்போது வரை கொண்டு வரப்படும் விவசாயத் திட்டங்கள் அனைத்துமே பெரு நிறுவனங்களை கொழுக்க வைப்பதாகவும், விவசாயிகளை சுரண்டுவதாகவுமே உள்ளன! காலப் போக்கில் இந்த பலாபலன்களின் பங்குதாரர்களாக விவசாய சங்க தலைவர்களும், என்.ஜி.ஓக்களும் சேர்ந்து கொண்டனர்.


1990களுக்குப் பின் தாராளமயக் கொள்கையால் இந்தியப் பொருளாதாரத்தில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. நம் நாட்டின் இயற்கை வளங்களைக் குறிவைத்து அந்நிய நிறுவனங்கள் கடன் கொடுத்தன. முதல் தர தேயிலை முதல் முந்திரி வரை அவர்கள் வட்டியாகப் பெற்றனர். அதுமட்டுமல்ல, இந்நாட்டில் உள்ள அரசியல்வாதிகளையே தங்கள் முகவர்களாக செயல்பட வைத்தனர். ஆட்சியில் இருக்கும் கட்சிகள் இதனால் அபிரிமிதமான பணத்தைக் குவிக்க ஆரம்பித்தன. பல திட்டங்களில் அவர்களே பங்குதாரர்களாக மாறினர். மக்களுக்காக என்று சொல்லி கொண்டு வரப்படும் அனைத்து திட்டங்களிலும் ஆட்சியாளர்கள் பணம் பார்ப்பதை தங்கள் பிறப்புரிமையாக நினைக்கத் தலைப்பட்டனர்.





மாநில ஆட்சியாளர்கள் மட்டுமின்றி, உள்ளாட்சி அமைப்புகளுமே வெளி நாட்டுக் கடன்களில் மஞ்சக் குளிக்கத் தொடங்கின! மக்கள் சேவை என்பது பெரிய அளவில் பின்னுக்கு தள்ளப்பட்டுவிட்டன! கொண்டுவரப்படும் திட்டங்களால் மக்களுக்கு என்ன பலன்? தொலை நோக்கு பார்வையில் இந்த திட்டம் ஏற்படுத்தப் போகும் விளைவுகள் என்ன? என்பதை யோசிக்காமல், அதில் தாங்கள் பெறப் போகும் பலாபலன்களை கணக்கில் கொண்டே திட்டங்களை செயல்படுத்தினர். தொண்டர்களுக்கும் இது புரிந்து, 'அரசியல் என்பது பணம் சம்பாதிப்பதற்கான வழி' என பார்க்க ஆரம்பிக்கின்றனர்.

தற்போது நிலைமைகள் பெரிய அளவில் மாறிவிட்டன! ஒரு அரசியல் கட்சி என்பதே கற்பனைக்கு எட்டாத வியாபார நிறுவனமாகிவிட்டது. கட்சி என்பதே வியாபாரத்திற்கான 'பிராண்ட்' ஆகிவிட்டது! கட்சித் தலைவர்களே கட்சியின் விளம்பரத்திற்கான மாடல்களாகிவிட்டனர். கட்சியை மக்களிடம் எடுத்துச் செல்லும் வாகனங்களாக மக்களுக்கான சேவைகளே இருந்த நிலை மாறி, பணத்திற்கு வேலை செய்யும் தனியார் நிறுவனங்கள் கட்சிக்கு தேவைப்படும் நிலை உருவாகிவிட்டது. பிரசாந்த் கிஷோர், சுனில் போன்ற தொழில்முறை அரசியல் ஆலோசகர்கள் தோன்றிவிட்டனர்.






தங்களை விளம்பரப்படுத்துவதற்கு மிக அதிகமாக கட்சிகள் செலவழிக்கின்றன! அதுவும் விஞ்ஞானம் வளர்ந்துள்ள சூழலில் தகவல், தொழில் நுட்ப சாதனங்களின் வழியே மக்களை மூளைச் சலவை செய்ய 'ஐ.டி விங்க்' ஏற்படுத்தி கொள்கின்றனர். இதில் 'வார் ரூம்' என்ற ஒன்றையும் உருவாக்கி, பெரும் சம்பளத்தில் அறிவாளிகளை நியமித்து சமூக ஊடகச் செல்வாக்கை வளர்க்கின்றனர். ஆட்சிக்கு வந்த கட்சிகள் தங்கள் ஊழலையும், முறைகேடுகளையும் பேசாது இருக்க, பெரிய ஊடகங்களை வளைத்து போட விளம்பரங்கள் தருவது..எனப் பல சலுகைகளைத் தந்து, மீடியாக்களை கைக்குள் போட்டுக் கொள்கின்றன!

கிளைச் செயலாளர், வட்டச் செயலாளர், மாவட்ட செயலாளர் மற்றும் வெவ்வேறு அணிகளின் தலைவர், செயலாளர் பொறுப்புகள் அனைத்துக்குமே இன்று ஒரு விலை வைத்து தான் கொடுக்கிறார்கள்! 'பணம் இல்லாதவர்களுக்கு கட்சி பொறுப்புகள் கிடைப்பது அரிதிலும் அரிது' என்ற நிலை தோன்றிவிட்டது. இதற்கும் மேலாக பிறகு கவுன்சிலர்கள், எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் ஆகிய வாய்ப்புகளை பணம் கொடுத்து போட்டி போட்டு வாங்குகின்ற நிலை தோன்றியுள்ளது. இப்படி அதிகாரத்திற்கு வருபவர்கள் பணத்தை எடுக்க, மக்களைத் தான் சுரண்டுகின்றனர். அதுவும் உள்ளாட்சி அமைப்புகள் ஏகத்துக்கும் மக்களை சுரண்டிக் கொழுக்கின்றன!

சமிப காலமாக அரசியல் கட்சிகள் கார்ப்பரேட் நிறுவனங்களை போல இயங்கத் தொடங்கியுள்ளன! உதாரணத்துக்கு இப்போது கடைசியாக நடந்து முடிந்த திமுக இளைஞரணி மாநாட்டை எடுத்துக் கொண்டால், உலக அளவில் 100 ஏக்கரில் யாருமே செய்யாத அளவுக்கு மாநாட்டு ஏற்பாடு என்கிறார்கள். இரண்டரை லட்சம்பேர் கலந்து

கொண்டதாகச் சொல்கிறார்கள். இரண்டரை லட்சம் பேருக்கு சைவ, அசைவ உணவுகள் திட்டமிட்டபடி சமைத்து பரிமாறப்பட்டன!

ஒன்றரை லட்சம் நாற்காலிகள் போடப்பட்ட பிரம்மாண்ட பந்தல்! அவர்கள் தங்கள் நாற்காலிகளில் அமரும் போது பைகளில் பிஸ்கட், நீர் உள்ளிட்டவை போடப்பட்டு வைக்கப்படும் அளவுக்கு திட்டமிடல், ஒழுங்கு, நிதி போன்றவற்றை எண்ணிப் பார்த்தால் மலைப்பே ஏற்படுகிறது! இதே போல அதிமுகவும் மதுரையில் ஒரு பிரம்மாண மாநாட்டை நடத்தியது. இவை தாம் பக்காவாக கார்ப்பரேட் மய பெருநிறுவனமயமாதலின் அடையாளம். பா.ம.க, வி.சி.க போன்ற கட்சிகளும் இதில் விதிவிலக்கல்ல! நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகள் சிலர் அதிகாரத்திற்கு வராமலே பெரும் செல்வந்தர்களாக தங்களை உருவாக்கி கொள்ள முடிந்திருப்பது ஆச்சரியமாக உள்ளது.

நான் எண்பதுகளில் கட்சி கூட்டங்களுக்கு மாநாடுகளுக்குச் செல்லும் போது தொண்டன் தன் குடும்பத்துடன் சொந்தசெலவில் மிகுந்த ஆர்வத்துடன் வருவதையே கண்டுள்ளேன். திராவிட இயக்க குடும்பங்களில் பெரியார், அண்ணா பற்றி குழந்தையிலேயே சொல்லி வளர்ப்பர்கள். அரசியலில் ஈடுபடுவதை சமூக மாற்றத்துக்காக நாம் செய்யும் கடமையாகப் பார்த்தார்கள். ஆனால், இன்றோ நாம் இதில் என்ன பயனடைகிறோம் என்று பார்க்கும் நிலைக்கு கட்சித் தொண்டர்கள் வந்து விட்டனர். கட்சிகளும் இவர்களைப் பயனாளிகளாகவே மட்டுமே பார்க்கிறார்கள். ஓட்டுகளை போடவும் ,ஓட்டுகளை வாங்கித் தரவுமான பணியாளர்களாக பார்க்கிறார்கள்!

மாநாடுகள் என்பவை கொள்கைகள் முழங்கப்பட்டு, லட்சியங்கள் விதைக்கப்படும் களங்களாக இருந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. அரசியல் கட்சிகளுக்கு கூட்டத்தை சேர்க்க ஆள் திரட்டும் செல்வாக்கான முகவர்களாக கட்சி நிர்வாகிகள் மாறி நிற்கின்றனர்.

‘நீங்கள் மாநாட்டுக்கு வாங்க. சொகுசாக பேருந்தில் அழைத்துவந்து சாப்பாடு போட்டு, பணம் கொடுத்து திரும்ப அனுப்புகிறோம்’ என்று தான் அழைக்கிறார்கள். கேள்வி கேட்பவர்களாக கட்சித் தொண்டர்கள் இருக்கக்கூடாது என்பதும் இதன் பின்புலத்தில் ஒளிந்திருக்கிறது. அரசியல் கட்சிகளுக்குள் நிலவுவது ஒருவிதமான சர்வாதிகாரமே. சர்வ அதிகாரத்தையும் தலைவருக்கு கொடுத்துவிட்டு, பணிந்து நிற்கும் கூட்டங்களாக பொதுக் குழு கூட்டங்கள் உள்ளன! தலைவர் தனக்கானவர்களை எப்படியும் வாழ வைப்பார் என்ற நம்பிக்கை நிர்வாகிகளிடம் தோற்று விக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் கோவையில் ஒரு தனியார் எம்.எல்.எம் நிறுவனத்தின் மீதான புகாரை விசாரிக்க அந்த நிறுவன உரிமையாளர் காவல்துறையால் அழைக்கப்பட்ட போது, அவர் தன் ஆதரவாளர்கள் சுமார் 10,000-க்கும் மேற்பட்டோரைத் திரட்டிக் காட்டி காவல் துறையை மிரள வைத்தார்! அதாவது, ஒருவரால் தொடர்ச்சியாக பலன் பெறுபவர்கள் ஒன்றுபட்டு தங்கள் நலன்களை பாதுகாக்கும் குறிக்கோளுக்காக அணி திரள்கிறார்கள்! எண்ணிக்கை பலம் அவர்களுக்கு எதையும் செய்யும் துணிச்சலைத் தருகிறது. இது போன்ற எம்.எல்.எம் நிறுவனங்களில் லட்சக்கணக்கில் மக்கள் சேர்ந்தாலும், நூற்றில் ஒருவர் மட்டுமே பலனடைய முடியும். மற்றுமுள்ள இரண்டு சதவிதம் பேர் சுமாராக பலனடையலாம். ஆனால், மொத்தத்தில் 97 சதவிகிதமானவர்கள் பணம் போட்டு, உழன்று போராடி அமைதியாகிவிடுவர்!

ஏமாற்றப்பட்டவர்கள் பெரும்பாலும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் அமைதி காப்பார்கள்! ஏமானோர் லட்சக்கணக்கில் இருப்பர். ஆனால், பலனடையும் அந்த மூன்று சதவிகிதமானோர் ஆர்ப்பாட்டத்துடன் தங்கள் அநீதியை நியாயப்படுத்தி, தங்கள் இருப்பை தக்க வைக்கப் போராடி நின்று கொள்வார்கள். அரசியல் கட்சிகளும் இன்று ஒரு வகையில் எம்.எல். நிறுவனங்களே! அதி சாமார்த்தியசாலிகளுக்கு அது வரப்பிரசாதம். அப்பாவியானவர்களுக்கு அது வெறும் அடையாளம். எப்போதாவது சிற்சில பலன்கள் கிடைக்கும், அவ்வளவே!

ஆக, லட்சியப் பிடிப்புடன் கூடிய கட்சிகளே இன்று அனேகமாக இல்லாத நிலை தோன்றியுள்ளது. இடதுசாரிகளும் பொது நலத் தொண்டில் இருந்து விலகிச் சென்றுவிட்டதாகவே தோன்றுகிறது. ஆனால், இன்னும் பிரதிபலன்கள் பாராத சில கொள்கை பிடிப்பாளர்கள், லட்சியவாதிகள் இந்த கட்சிகளில் எஞ்சியுள்ளனர். சுமார் அரைசதவீத வாக்குகள் கொண்டிருக்கும் இக்கட்சிகளுக்கு தமிழ்நாட்டில் சுமார் ஆறு இடங்களை பெரிய கட்சி தங்கள் கூட்டணியில் தருகிறது என்றால், அக் கட்சியில் இருக்கும் அணிகளின் பிரச்சார பலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவே தருகிறது. ஆட்சியாளர்களின் தேவைக்கேற்ப ஓயாது பிரச்சாரங்கள், போராட்டங்கள், அறிக்கைகள் என்று இக் கட்சிகளும் பாடுபடுகிறார்கள். வர்த்தகரீதியான பெருநிறுவனங்களின் செயல்பாடுகள் போல இதுவும் ஆகிவிட்டது.

இந்நிலையில் லட்சியபூர்வமான கட்சிகள் உருவாவதற்கான வாய்ப்புகள் மிக அரிது. இந்த பின்னணியில் தான் நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழர் வெற்றி கழகம் கட்சியின் நகர்வையும் நாம் பார்க்க வேண்டும்.

உட்கட்சி ஜனநாயகம் என்பது இன்று முற்றிலும் ஊனப்பட்டு நிற்கிறது. மக்கள் நலன் என்பது பின் தள்ளப்பட்டு சிறு குழுக்கள் பலனடையும் போக்கு மட்டுமே உள்ளது. ஜனநாயக மீட்பு என்பதை முதலாவதாக அந்தந்த கட்சிக்குள் இருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலையில் தான் நாடு உள்ளது. கொள்கைவாதிகள், லட்சியவாதிகள், பொது நலன் விரும்பிகள் எந்த கட்சிகளுக்குள்ளும் தங்களை பொருத்திக் கொள்ள முடியாமல் உதிரிகளாக உழன்று கொண்டுள்ளனர். பொருத்திக் கொண்ட ஒரு சிலர் அமைதியாகிவிடுகிறார்கள்!

**சாவித்திரி கண்ணன் (அந்தி மழை இதழுக்காக நான் தந்த பேட்டி)**

---

## <u>இயக்கத்தில் புதிதாக இணைந்தவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்</u>
## <u>2024-25 இல் இணைந்தவர்களின் ஆண்டு உறுப்பினர்கள் பெயர் மற்றும் முகவரி</u>

| | | |
|---|---|---|
| Dr.K.Padmanabhan<br>17-32,College Road,<br>Palamadom, Vilavancode,<br>Nithiravilai-629154 KK Dist<br>PH-9443231944 | A.Periyanayagasamy<br>4/51,Mosque Street<br>Hayath Nagar<br>Ph-94881359986 | Thiru D.Vasigaran<br>604/15,Thillai Nagar<br>Thiruppathur-635601<br>Ph-9944238789 |
| Thiru B.Idhayakumar<br>Nila.3/134,Kamarajar street<br>ThillaI nagar<br>Thiruppathur-635601<br>Ph-9486050641 | Rajagopal<br>630/3,Koyyali Vattam<br>Perambattu,<br>Thiruppathur-635601<br>Ph-9442179195 | P. Raj Kumar<br>2,Dharmaraja Koil Street<br>11th Cross<br>Thiruppathur-635601<br>Ph-9944228852 |
| Thiru A.S.Govindan<br>54,HIG,PHASE-1<br>TNHB,Tthiruppathur-635601<br>Ph-9488656897 | Thiru I.Bharathi Louie<br>3/134,Kamarajar Street<br>Thillai Nagar, Paichal<br>Thiruppathur-635601<br>Ph-9361813204 | P.Arunkumar<br>2,Dharmaraja Koil Street<br>11th Cross<br>Thiruppathur-635601<br>Ph-9600928215 |
| T.R.Srivasan<br>Narasingapuram vii&post<br>155,TRS Illam<br>Vaniyambadi-635701<br>Ph-9626726088 | R.Sugan raj<br>Thiru 5/47,Samiyar Kottai,<br>Near Railway Station<br>Thiruppathur-635601<br>Ph-9791617555 | Thiru S.Kalaiarasan<br>361,Sai Baba Nagar<br>Thiruppathur-635601<br>Ph-9677768448 |
| Thiru R.Settu<br>Pillaiyar koil Stret, Annadapatti<br>Karupanur post<br>Thiruppathur-635601<br>Ph-9443333825 | Thiru P.Ramu<br>22,Ambedkar Nagar<br>Sivaraj pettai<br>Thiruppathur-635601<br>Ph-6369287463 | Thiru V.Pugazhendi<br>298,Phase-I , TNHS<br>Thiruppathur-635601<br>Ph-8442411522 |
| Thiru R.Periyasamy<br>308/10 ,Advocate<br>Ramanathan Street<br>Thiruppathur-635601<br>Ph-9944443359 | Thiru S.Suryakumar<br>2/339,VETTAPATTU PO<br>Natram Palli<br>Thiruppathur-635601<br>Ph-9597474420 | Thiru S.Puratchi Vendhan<br>Kurusilampattu Village<br>Thiruppathur--635702<br>Ph-9790261240 |

| | | |
|---|---|---|
| 221,Asiriyar Nagar<br>Thiruppathur-635601<br>Ph-9443397999 | Thiru S.Illayaraja<br>3/472,Madapalli Village<br>Madvalam post | Thiru S.Prabhakar<br>22/12,Anumandha ubasagarnagar<br>Thiruppathur-635601<br>Ph-9003689323 |
| Thiru S.Sundaramurthy<br>4/204A,Periyar Nagar<br>Kurisilapattu,<br>Vaniyambadi-635702<br>Ph-9500453867 | Thiru A.Divakar<br>13,Ponniyamman koil Styreet<br>Thiruppathur-635601<br>Ph-6388629879 | Thiru Saravanak kumar<br>L-160/2, New No : 529<br>Kottappalli Colony<br>Thiruchengodu-637214<br>Ph: 94432 24554 |
| Thiru J.Ravichandran<br>Puthupettai Road<br>Thiruppathur-635601<br>Ph-7200996702 | Thiru S.Chandru<br>1/190,Jai bhim Nagar<br>Paichal post,<br>Thiruppathur -635601<br>Ph-7358816023 | |






## அதானி குழுமம் ரூ.42,768 கோடி முதலீடு

சென்னை, ஜன. 9-

அதானி குழுமம், தமிழகத்தில் 42,768 கோடி ரூபாய் முதலீடு செய்கிறது. சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

'அதானி கிரீன் எனர்ஜி' நிறுவனம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 24,500 கோடி ரூபாய், 'அதானி கனெக்ஸ்' நிறுவனம் சென்னையில் 13,200 கோடி ரூபாய், 'அம்புஜா சிமென்ட்' 3,500 கோடி ரூபாய், 'அதானி டோட்டல் காஸ்' நிறுவனம் 1,568 கோடி என மொத்தம் 42,768 கோடி ரூபாய் முதலீடு செய்கின்றன. இதனால், 10,300 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதானி

ஹிந்துஜா 1,200 கோடி ரூபாய் முதலீடு செய்ய, தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. அடுத்த மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் வாகன துறையில் புத்தாக்கம், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், வணிக விரிவாக்கத்திற்காக இந்த முதலீடு உதவும். இதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், அரசு – தனியார் கூட்டுமுயற்சி கொள்கையை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

## 'இந்தியாவில் ஒரு ... வேண்டும்'

நேர்மை நெறி- பிப்ரவரி 2024 (February 2024)

**Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419**

**SSB/Chennai City North Divn**

**Regn.No.TN/CCn/671/2018-20**

**PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20**

படித்ததில் பிடித்தது !!

கடல் நீர் மிகவும் கரிக்கிறது என்று
மனு கொடுத்தது
ஆற்று நீரில் அடித்து வரப்பட்ட மீன்!

மனுவை வாங்கிப் பார்த்த கடல்
வானிற்கு பரிந்துரை செய்தது.

வானம் மேகத்திடம் அனுப்பியது
மேகம் மழையிடம் அனுப்பியது
மழை அருவியிடம் தந்தது
அருவி ஓடையிடம் அனுப்பியது
ஓடை ஆற்றிடம் அனுப்பியது
ஆறு கடலிடம் கொண்டு சேர்த்தது.

என்ன செய்வது என்றறியாமல்
கிடப்பில் போடப்பட்டது மனு!

அதற்குள் உப்பு நீரிலேயே
வாழப் பழகிக் கொண்டு விட்டது மீன்!

இப்படிதான் நாமும் எல்லாவற்றிற்கும்
முணுமுணுத்து விட்டு வாழப் பழகிக்
கொள்கிறோம்!

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின்
திங்களிதழ்

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச் செயலாளர் : ஜி கோவிந்தசாமி:

**Permitted to Posting 7th to 13th**
**Posted at Patrika Channel**
**(Egmore RMS/1) on 13 Feb 2024**

எல்லா உயிற்கும் ஏமம் ஆஜிய,
னீரறவு அறியக் கரகரத்துத்,
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்

பெறுநர்

IF UNDELIVERED, PLEASE RETURN TO
**ACM, 155, KONNUR HIGH ROAD, AYANAVARAM, CHENNAI-23**

**Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI and published through online on its behalf of Thiru Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai -600023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005; Editor: Thiru V.Karthikai Rajan (8778312823)**